1970 செப்டம்பர் 9]

(உ) இல்லை.

(ஊ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, may I know whether representation was received from this Association with regard to irregularities and if so, the action taken by the Government to set right the irregularities alleged to have been mentioned in the representation?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சில பேர்கள் அந்த இடத்தில் போய் முத்துவேலப்பர் குடியிருப்பு என்றும், அகாம் பொதுநல மன்றம் என்றும் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். இது எல்லாம் 1969-இல் நடந்தது. இந்த நிலத்தை அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு குடியிருப்பு மனைக்காக பட்டா செய்துகொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தது. அதற்குள்தான் ஒருவர் அந்த நிலத்தை தமக்குச் சொந்தமானது என்று சில பேர்களுக்கு கூறுபோட்டு விற்கவும் ஆரம்பித்தார். வாங்கினவர் குடிசைபோட முயன்றார். அரசாங்கம் டிரஸ்பாசர்கள் என்ற முறையில் அவர்களை அப்புறப்படுத்தி, வழக்கும் தொடர்ந்திருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, in a number of places some persons go and put up some flag or other and say that that particular area belong to them and then they sell the lands there. It is only after their sale that the Government wake up and say that they belong to them. So, will the Government put up a board with the inscription that they are poramboke lands and that they belong to them, so that no such fraudulent transactions could take place?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்த போர்டு இருந்தாலும் ஏமாறுகிறவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஏமாறுகிறவர்கள் குறைந்தால் எல்லாம் சரியாகிவிடும்.

திருப்பூர் நகராட்சிப் பள்ளிக்கு இடம்

*319 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம், பள்ளிக்கு இடம் கேட்டு விண்ணப்பித்தது சம்பந்தமாக திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு 1969 ஆகஸ்டு மாதத்தில் ஓர் விண்ணப்பம் தந்தாரா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சிப் பள்ளிக்கென விண்ணப்பிக்கப்பட்ட திருப்பூர் நகரம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த T.S. 705/2 எண் கொண்ட இடத்தை ஆக்ரமிப்பு செய்திருப்பவரை வெளியேற்றுவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

திரு. சு. துரைசாமி : உயர்நீதி மன்றத்தில் இருக்கிற அந்தத்தடையை நீக்கி விரைவில் அந்த இடத்தைப் பள்ளிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, அந்த இடத்தை பள்ளிக்குக் கொடுக்கவேண்டும் என்றுதான் டி..ஆர்.ஓ. பரிந்துரை செய்திருக்கிறார். ஹைகோர்ட் ஸ்டே எடுக்கப்பட்டவுடன்தான் என்க்ரோச்மென்டை அகற்ற அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

Licence for cotton transport

320 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu has increased the fee for renewal of annual general licence for Cotton transport from Rs. 200 to Rs. 300 a year; and

(b) if so, why?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ)-உம் (இ)-உம் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் இது குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : இந்த பருத்தி ஏற்றுமதி செய்வதற்கு 200 ரூபாயாக இருந்த பீசை 300 ஆக உயர்த்தியிருப்பதனால் அரசாங்கத்திற்கு வருகிற மொத்த லாபம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அனுப்பப்படுகிற பருத்தியின் தரத்தைப் பரிசோதித்தல், செலவுக்கணக்கைச் சரி பார்த்தல் போன்ற பல வேலைகளுக்குச் சர்க்கார் அதிகாரிகளைப் போடவேண்டியிருக்கிறது. ஆகவேதான் 200-இல் இருந்து 300-ஆக பீஸ் உயர்த்தப்பட்டதே தவிர தவிர வேறு இல்லை.

Cocoa plantations

* 321 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether a large number of acres are to be brought under Cocoa plantations in this State during 1970–71; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கொக்கோ பயிருக்குத் தேவையான மழை வளம், நிலவளம் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. அது அதிக வருவாய் உள்ள பயிர். ஆகவே ரப்பர் தோட்டம் போன்று கொக்கோ ப்ளான்டேஷனுக்கும் திட்டம் வகுக்க அரசாங்கம் முன்வருமா?

---

* 457-458-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.